

# ரூபியின் கருணை

பூங்கோதை

நீதிக்கதை

3.3

STEM-Kalvi Charity



ஒரு பெரிய காட்டில், ரூபி என்ற சிறிய முயல்
. வாழ்ந்து வந்தது. முயல் ரூபிக்கு
மென்மையான ரோமங்களும், பிரகாசமான
இளம் சிவப்பு காதுகளும் உண்டு.
அத்தோடு. ரூபியின் கருணை பற்றிக் காடு
முழுவதும் தெரிந்திருந்தது.



ஒரு நாள் காலையில், முயல் ரூபி தனது வளையிலிருந்து வெளியேவந்தது. வண்ண மயமான மலர்களுக்கு அருகில் தனது நண்பர்கள் விளையாடுவதைக் கண்டது.



ஆனால் அதனுடைய நண்பன் அணில்
ஆதி மட்டும் தனியாக, சோகமாக
இருந்தது.



"ரூபி" ,  ஆதி பெருமூச்சு விட்டது.

.

"எனக்குப் பிடித்த மாம்பழம் ஒன்றைத் தொலைத்து விட்டேன் "



ஆதி சோகமாக இருப்பதைப் பார்த்த
ரூபியின்  இதயம் கனத்தது.



ரூபி ஆதியின் முதுகில் மெதுவாகத் தட்டியது.
"கவலைப்படாதே ஆதி. உன் தொலைந்த மாம்பழத்தை நானும் நீயும் சேர்ந்து கண்டு பிடிப்போம்!“

.



எனவே, ரூபியும் ஆதியும் தேட ஆரம்பித்தன. இலைகளுக்கு அடியிலும், பாறைகளுக்குப் பின்னாலும், பறவைக் கூட்டின் உள்ளேயும் கூட தேடின.



"ஆதி, அங்கே பார்!" ரூபி துள்ளிக் குதித்தது. ஒரு மரத்தின் அடியில் ஆதியின் தொலைந்து போன மாம்பழத்தை அவை கண்டன.



“அது என்னுடைய மாம்பழம்!" ஆதியும் மகிழ்ச்சியில் துள்ளியது. ரூபி அதைத் தேடிக் கண்டு பிடித்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தது. .



"ரூபி, எனக்கு உதவியதற்கு நன்றி."
ரூபிக்குப் பெருமையாக இருந்தது .

ரூபியின் இதயம் ஆதிக்கு உதவி செய்ததால்
பெருமையால் பூரித்தது.



கருணை என்பது மற்றவர்களுக்கு உதவுவது. அத்தோடு அவர்களைக் கவனித்துக் கொள்வது தான் என்று ரூபி உணர்ந்தது.



எனவே, ரூபி தன் காடெங்கும் தனது கருணை, அன்பு என்பவற்றைத் தொடர்ந்து பரப்பியது.



"மற்றவர்களை மகிழ வைக்கும் போது எனது இதயம் நிறைகிறது.."
ரூபி கூறியது.



"ரூபி சொல்வது சரிதான்," விலங்குகள் ஆமோதித்தன.

அவை அனைத்தும் முன்னரை விட அன்போடும் ஒற்றுமையோடும் வாழ்ந்தன.

**முற்றும்**

**Publisher:** STEM-Kalvi Charity

**Email**: STEMkalvi@gmail.com

**Web:** WWW.STEMkalvi.org

**Writer :** Poonkothai, UK



**Book: Rubiyin Karunai**
**(ரூபியின் கருணை)**

**Language: Tamil**

**Reading Level**: 3.3

**ISBN:** xxxxxxx

**Editor**: Dr K Ganesan, Founder and Director, STEM-Kalvi

This book is part of the **'1000 Reading Books'** initiative by STEM-Kalvi Charity, dedicated to creating literature for children under 10. These books aim to boost literacy rates in schools, addressing a critical need revealed in a UNICEF study conducted in 2022

**About the writer :** Poonkothai migrated from Sri Lanka to the UK in 1989. After completing her graduation and post-graduation in science and education, she entered the educational field. She has been teaching as a qualified full-time English teacher at Government Schools in the UK for several years. Poonkothai published a Health Promotion book in 2004 and a collection of short stories in 2022, dedicating her Tamil skills to her late mother, a Tamil teacher, Puvaneswary.

| Sub Level | 1.1 | 1.2 | 1.3 | 2.1 | 2.2 | 2.3 | 3.1 | 3.2 | 3.3 | 4.1 | 4.2 | 4.3 | 5.1 | 5.2 | 5.3 | 6.1 | 6.2 | 6.3 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Main Level | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | | 6 | | |

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics